**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**13.07.2020 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

1) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனங்கள் TN 43 Y **0393**, TN 43 X **1824** மற்றும் TN 43 Y **8275** ஆகியவற்றில் ஏற்பட்ட சிறு பழுதுகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் பணி மனையில் பழுது நீக்கம் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.7706/– ஐ இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. என். சரவணன் என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனங்கள் TN 43 Y **8303**, TN 43 X **1824** ஆகியவற்றில் ஏற்பட்ட சிறு பழுதுகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் பணி மனையில் பழுது நீக்கம் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.5295/– ஐ இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. என். சரவணன் என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

3) இந்நகராட்சியில் இயங்கி வரும் கீழ்கண்ட வாகனங்களுக்கு அவற்றிற்கெதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் இன்சூரன்ஸ் முடிவடைவதால்

| வ.எண். | வாகன எண் | பயன்பாடு | இன்சூரன்ஸ் முடிவடையும் தேதி |
|---|---|---|---|
| 1 | TN 43 Z **4447** | திடக்கழிவு சேகரித்தல் | 14.07.2020 |
| 2 | TN 43 Z **4448** | திடக்கழிவு சேகரித்தல் | 14.07.2020 |
| 3 | TN 43 Z **4443** | குடிநீர் வாகனம் | 14.07.2020 |
| 4 | TN 43 Z **4203** | பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் | 14.07.2020 |

மேற்படி இன்சூரன்ஸ் கம்பனியான United India Insurance Co. Ltd நிறுவனத்திடமிருந்து 03.07.2020 அன்று வரப்பெற்ற கடிதத்தில் மேற்படி வாகனங்களுக்கு நடப்பாண்டு காப்பீட்டு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் சேர்த்து தொகை ரூ.1,12,370/– செலுத்த கோரியதை மேற்படி நிறுவனத்திற்கு செலுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

4) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனங்கள் TN 43 Y **8296**, TN 43 X **1825** மற்றும் TN 43 X **1828** ஆகியவற்றில் ஏற்பட்ட சிறு பழுதுகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் பணி மனையில் பழுது நீக்கம் செய்யப்பட்டது. அதற்கான தொகை ரூ.9700/– ஐ இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. என். சரவணன் என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

5) கூடலூர் நகராட்சியில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டம் – 2016–2017 -ன் கீழ் கூடலூர் நகராட்சிக்கு கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுதல் பணிக்கு ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்:25306–12/2016/பி2 நாள்.24.11.2016–ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 05.06.2020–ல் இரு உறை முறையில் இரண்டாவது

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதியினை ஆய்வு செய்ததில் திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ் அவர்கள் மட்டும் தகுதி பெறுவதால் அவர்களின் விலை ஒப்பந்தபுள்ளி 08.07.2020 அன்று திறக்கப்பட்டதின் விபரம் கீழ் வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ்,<br>கூடலூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>4.90% அதிகம் |

மேற்படி மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.90% அதிகமாக கொடுத்துள்ளார். ஒப்பந்ததாரர் திருவாளர். ஹாம்சன் பில்டர்ஸ், கூடலூர் அவர்களிடம் 08.07.2020 அன்று விலை குறைப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில் விலை விகித ஒப்பந்தப்புள்ளியில் 2 இனங்களில் விலை குறைப்பு செய்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் இவரது ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்பு செய்தும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.70% அதிகமானதாக உள்ளது.

எனவே, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.70% அதிகமாக திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ், கூடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இரண்டாவது அழைப்பாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.70% அதிகமாக திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ், கூடலூர் அவர்கள் அளித்ததில் ஜல்லி விலை உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.
3. இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர் திருவாளர்.ஹாம்சன் பில்டர்ஸ், கூடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி(நீலகிரி)

கூடலூர் நகராட்சி(நீலகிரி)
**27.07.2020 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற அவசர கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

1) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையார், சென்னை அவர்களுக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கும், மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், உதகை அவர்களுக்கும் அறிக்கை சமர்பிக்க புகைப்படம் எடுத்து CD யில் பதிவு செய்தமைக்கு திரு.பாக்கியநாதன், பாக்கிய ஸ்டுடியோ அவர்களுக்கு கீழ்கண்டவாறு தொகையினை வழங்க மன்றத்தின் அனுமுதி வேண்டப்படுகிறது.
   1) 31.02.2020 – ரூ.8390/–
   2) 28.02.2020 – ரூ.2250/–
   **மொத்தம் – ரூ.10640/–**

   அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலம்

2) இந்நகராட்சிக்குட்பட்ட அக்ரஹாரம் பகுதியில் சிக்னல் மற்றும் மீன்கடையின் அருகில் உள்ள வால்வுக்கான தொட்டி பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலையில் உள்ளதால் நகராட்சி குடிநீர் குழாய் பொருத்துனர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்பழுதுகளை சரி செய்ய தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
   **அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

3) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உதகை அலுவலக நடப்பாணைஎண்.NLG00296/OS/DEE/TNPCB/கா/**2019**–ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகராட்சியில் இயங்கி வரும் எரிவாயு தகனமேடைக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய இசைவாணை பெறுவதற்கான கட்டணம் ரூ.**17900/–** ஐ மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.
   **அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

4) இந்நகராட்சிக்குட்பட்ட காளம்புழா பாலம் முதல் வேடன்வயல் வரை உள்ள ஓடை துார்வாருதல் பணிக்கு பொது நிதியில் ரூ.7.00 இலட்சத்திற்கு நகர்மன்ற கூட்ட பொருள்களின் தீர்மானம் எண் ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி 17.07.2020 ம் நாள் மாலை 3.00 மணிக்கு பெறப்பட்ட விபரம் கீழ் வருமாறு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட காளம்புழா பாலம் முதல் வேடன்வயல் வரை உள்ள ஓடை துார் வாருதல் | ரூ.7.00 | திரு.ஜெயநாதன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.ஸ்டீபன் சகாயராஜ் | 0.057% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.05% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு – 1) அனுமதி வழங்கலாம்
2) 0.05% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த திரு.ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

5) இந்நகராட்சியில்2019–2020 ம் ஆண்டு மேற்கொண்ட வளர்ச்சிப்பணிகளுக்கான செலவு பட்டியல் தொகைகளை நகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட செலவு பட்டியல்களில் வருமானவரி மற்றும் சரக்கு சேவை வரி பிடித்தம் செய்யப்பட்டது. அதை அரசு கணக்கில் செலுத்தி E-Filing & GST filing செய்து கொடுத்த திரு.செந்தில் நாதன், ஆடிட்டர், திருச்சி அவர்களுக்கு தொகை ரூ.4425/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுககிறது.

| | 2018–2019 | 2019– 2020 | மொத்தம் |
|---|---|---|---|
| GST Filing fees | 750 | 9000 | 9750 |
| Income tax Filing fees | | 16000 | 16000 |
| 2011 – 12 முதல் 2018–19 | 18500 | – | 18500 |
| மொத்தம் | | | 44250 |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை அருகில் திருவள்ளுவர் வணிக வளாகம் மற்றும் பாரதிதாசன் வணிக வளாகம் ஆகிய இடங்களில் உள்ள பொது கழிப்பிடங்களில் நச்சுத் தொட்டிகள் நிறைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி நச்சுத் தொட்டிகளை உதகமண்டலம் நகராட்சி கழிவு நீர் வாகனம் மூலம் சுத்தம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதனை ஏற்கலாம்.

7) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளின் உள்ள சில பகுதிகளில் குடிநீர் குழாய் பழுதடைந்துள்ளதால் மற்றும் உபகரணங்கள் மாற்ற வேண்டியுள்ளதால் பொது மக்களுக்கு சீராண குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளதால் குடிநீர் குழாய் மற்றும் உபகரணங்கள் விநியோகம் பெற ஆகும் செலவினம் ரூ.8.20 இலட்சத்திற்கு குடிநீர் திட்ட நிதியின் கீழ் விநியோகம் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

8) இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 20 முதல் மைல் கொக்ககாடு பகுதியில் மூடியுடன் கூடிய கழிவு நீர் கால்வாய் அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 2 சுரக்காபட்டினம் மாரியம்மன் கோவில் அருகில் கல்வெட்டு மற்றும் நடைபாதை அமைக்க பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

10) இந்நகராட்சிக்குட்பட்ட ஆடு மாடு வதை செய்யும் கூடத்திற்கு வசூல் செய்யும் உரிமைக்கு 28.07.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இதில் ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் இந்த இனத்திற்கு 2 நபர்கள் மட்டும் கீழ்கண்டவாறு ஏலத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

| வ.எண் | ஏலதாரரின் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.R.M.முகம்மது சபி,<br>காசிம்வயல்,கூடலூர் | ரூ.157000/– |
| 2 | திரு.M.மொய்தீன்,<br>காசிம்வயல்,கூடலூர் | ரூ.156500/– |

மேற்கண்ட 2 ஏலதாரர்களில் வரிசை எண் 1 ல் காணும் திரு.R.M.முகம்மது சபி, கூடலூர் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத்தொகையை ஏற்றுக்கொள்வது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** ஆடு மாடு வதை செய்யும் உரிமைக்கு ஏலம் விடப்பட்டுள்ளதால் இதனை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

2) இந்த இனமானது 01.04.2020 முதல் 31.03.2023 வரை உள்ள மூன்றாண்டு காலம் என்பதாலும் 01.07.2020 முதல் 31.03.2021 வரை உள்ள 9 மாத காலத்திற்கு ஏலத் தொகையிலிருந்து 75% மட்டும் அதற்கான GST 18% வசூல் செய்து கொள்ளவும் மன்றம் முடிவு செய்யலாம்.

3) மேற்படி இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையில் (குத்தகை தொகையில்) இரண்டாம் ஆண்டில் 5 சதவீதம் குத்தகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டு குத்தகையில் மேலும் 5% குத்தகை தொகையும் உயர்வு செய்யலாம்.

11) இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN 43 Z 4448 கடந்த 08.05.2020 அன்று விபத்துக்குள்ளானது. மேற்படி வாகனத்தின் விபத்து குறித்து யுனைடெட் இந்தியா இன்சூரன் நிறுவனத்திற்கு புகைப்பட ஆதாரங்கள் வழங்குவதற்காக பாக்யா ஸ்டுடியோ நிறுவனம் மூலம் புகைப்படம் எடுத்ததற்கான செலவினம் ரூ.1080/– ஐ வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

12) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை எண் 180 நாள் 04.04.2020 ன்படி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு பணியின்போது கொரோணா தொற்று ஏற்பட்டால் மருத்துவ செலவுகளுக்காக ரூ.2.00 இலட்சம் அரசால் வழங்கப்படுவதாக உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை நகல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

13) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகிக்கும் முறையில் குளோரின் கலந்து குடிநீரானது பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்வதற்கு கோழிப்பாலம் வடிகால் படுகை கோக்கால், தொரப்பள்ளி மற்றும் காமராஜ் நகர் ஆகிய நான்கு பகுதிகளிலும் குளோரிநேசன் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குளோரின் விநியோகம் பெறுவதற்கும் ஒரு வருடத்திற்கு முழுவதும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கும் மதிப்பீடு தயார் செய்ய 29.07.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளியின் விபரம் கீழ்வருமாறு.

1) M/s.Klenz - Incorporation - ரூ. 320960.00
2) M/s.Ask - Unique Solution - ரூ. 339840.00
3) M/s.Rio - Technologies - ரூ. 356360.00

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Klenz - Incorporation அவர்களின் விலைப்புள்ளி ஏற்று ரூ.3.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொதுநிதி 2020–2021 ன் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

14) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகிக்கும் முறையில் குளோரின் கலந்து குடிநீரானது பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டமானது கோழிப்பாலம் வடிகால் படுகை கோக்கால், தொரப்பள்ளி மற்றும் காமராஜ் நகர் ஆகிய நான்கு பகுதிகளிலும் குளோரிநேசன் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இம்முறையில் சரியான முறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளதால் பிளான்ட் அருகில் புதியதாக மூன்று ஸ்டீல் பாபிரிக்கேஷன் முறையில் அறைகள் அமைக்கப்படவேண்டி உள்ளதால் இப்பணிக்கு 2020–2021 ல் தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியலில் இல்லாத இனங்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளிகோரி மதிப்பீடு தயார் செய்ய வேண்டி உள்ளதால் 29.07.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளியின் விபரம் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| M/s.Klenz | - Incorporation | - ரூ. 192326.00 |
| M/s.Ask | - Unique Solution | - ரூ. 202140.00 |
| M/s.Rio | - Technologies | - ரூ. 212460.00 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Klenz - Incorporation அவர்களின் விலைப்புள்ளி ஏற்று ரூ.8.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொதுநிதி 2020–2021 ன் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

15) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று நோய் (COVID-19) பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான கிருமி நாசினிகள், முகவுறைகள்,ஸ்பிரேயர்கள்,கவச உடைகள் ஆகியவை வாங்குதல் மற்றும் விப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) அனுமதி வழங்கலாம்

2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை ஏற்கலாம்

16) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுலை – 2020 மாதத்திய மாதாந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** பதிவு செய்யலாம்.

17) கூடலூா் நகராட்சிக்கு திட்ட இயக்குநர்,சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம், உதகமண்டலம் அவர்களின் செயல்முறைகளின்படி 2019–2020 ம் ஆண்டுக்கு 20.03.2020 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 5 பணிகளுக்கு சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 75% பங்கு தொகையும் நகராட்சி பொது நிதியில் 25% பங்கு தொகையும் என கணக்கிடப்பட்டு ரூ.43.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 5 பணிகளில் 4 பணிகளுக்கு சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பங்கு தொகையில் 75% பங்கு தொகையில் 30% குறைக்கப்பட்டுள்ளதால் பணிகளை முழுமையாக முடிக்க முடியாமல் உள்ளது. எனவே குறைக்கப்பட்ட சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் பங்கு தொகையினையும் 2020–2021 ம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளுவதால் நடப்பாண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை பட்டியலின்படி பணிகள் மேற்கொள்ளும்பொழுது 5 பணிகளுக்கு கூடுதலாக தேவைப்படும் தொகையினையும் சேர்த்து கணக்கிடப்பட்டு தொகை ரூ.16.877 லட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) வார்டு எண் 4 மவுன்ட் பிளஸன்ட் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். மதிப்பீடு தொகை ரூ.7.80 லட்சம்

2) வாரடு எண் 7 கோழிப்பாலம் சேப்புட்டி பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் நடைபாதை அமைத்தல். மதிப்பீடு தொகை ரூ.6.40 லட்சம்
3) வார்டு எண் 21 வேடன் வயல் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். மதிப்பீடு தொகை ரூ.3.60 லட்சம்
4) வார்டு எண் 5 கோத்தரவயல் பணியர் காலனி பகுதியில் கழிவு நீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை அமைத்தல். மதிப்பீடு தொகை ரூ.4.30 லட்சம்
5) வார்டு எண் 8 நந்தட்டி பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்தல். மதிப்பீடு தொகை ரூ.23.00 லட்சம்

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்

2) கூடுதலாக தேவைப்படும் ரூ.16.887 லட்சத்தினை நகராட்சி பொது நிதியில் பணிகள் மேற்கொள்ளலாம்.
3) மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெற்று ஒப்பந்த புள்ளி கோர மன்ற அனுமதி வழங்கலாம்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி(நீலகிரி)